முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு கோட்டை பகுதி கழகத்தின் சார்பில் திருநகர் காலனி கோட்டை பகுதி அலுவலகம் முன்பு கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு பகுதி கழக செயலாளர் பொ.ராமசந்திரன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்திவிட்டு அண்ணா கல்லூரி மாணவிக்கு கல்வி உதவித் தொகை ரூ.25000 வழங்கப்பட்டது. நிகழ்வில் மாமன்ற உறுப்பினர் இரா. ஜெயந்தி, பகுதி கழக நிர்வாகிகள் அண்ணாதுரை, பாபு, மீனாட்சி குமரேசன், வேலுமணி, பாலசுந்தரம், வட்ட கழக செயலாளர்கள் பாலன், பூபாலன், பிரகாஷ், மகளிரணி பாத்திமா சாகுல், லட்சுமி கதிரவன், ஜன்னத்து நிஷா, தங்கவேல், சுல்தான், ஆறுமுகம், அரவிந்த், புவனேஸ்வரன், ஜாகிர்உசேன், பாலசுப்பிரமணியம், மீரான், அழகர்சாமி, தங்கவேல், செல்லம், புத்தர், சரண்யா, தொகுதி ஆறுமுகம், மூர்த்தி, தியானேஸ்வரன், சசிகுமார், குமார், செபாஸ்டின், செல்லம், மணிகண்டன், அமல்ராஜ், ரவிச்சந்திரன், பாபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

கோவை தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் கூலூர் மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கூலூர் பிரபு வரவேற்புரையில், மாநில மாணவர் அணி துணை செயலாளர் வி.ஜி.கோகுல், துணை அமைப்பாளர் விக்னேஷ், தண்டபாணி முன்னிலையில் நடைபெற்றது. இதில் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி!

மனுக்கள் மீது அடுத்த வாரத்திற்குள் நிவர்த்தி செய்து கொடுக்கப்படும்!

ஆஸ்டின் எம்.எல்.ஏ. உறுதி!

நாகர்கோவில்,ஜூன் 11 -

நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் ஆஸ்டின் எம்.எல்.ஏ. தொகுதிக் குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் வீடு வீடாகச் சென்று மக்களிடம் குறை நிறைகளை கேட்டு குறைகளை கோரிக்கைகளாக பெறும் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட 28 வது வார்டுக்கு உட்பட்ட குறுந்தெருவில் இருந்து தொடங்கியது. அந்த வார்டுக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் சென்று மக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். பின்னர் அவர் கூறியதாவது:

இந்த தொகுதி மக்கள் அதிகமான வாக்குகளை வழங்கி வெற்றி பெறச் செய்து, அவர்களுக்கு பணியாற்றக்கூடிய வாய்ப்பை எனக்கு வழங்கியிருந்தார்கள். மக்களைத் தேடி வந்து, நேரடியாக அவர்களைச் சந்தித்து, அவர்களுடைய குறைகளையெல்லாம் கேட்டு, இந்த தொகுதியை ஒரு முன் மாதிரி தொகுதியாக அனைத்து வளர்ச்சிப் பணிகளையும் நிறைவேற்றக் கூடிய தொகுதியாக மாற்றுவோம் என்று நாங்கள் வாக்குறுதி கொடுத்திருந்தோம்.

அந்த அடிப்படையிலே, இரண்டு கட்டங்களாக மக்களைச் சந்தித்து, நேரடியாக அவரிடத்திலே மனுக்களைப் பெறக்கூடிய திட்டங்களை வகுத்து உள்ளோம். ஒன்று, ஆறு மாதத்திற்கு ஒரு முறை ஒவ்வொரு வார்டு பகுதிகளிலும், அரசு அதிகாரிகள் அனைவரையும் அழைத்துச் சென்று குறைதீர்க்கும் முகாமினை நடத்தி, நேரடியாக அந்த வார்டில் உள்ள மக்கள் தங்களுக்கு என்ன தேவை என்று சொல்கின்றார்களோ, அதனை நிவர்த்தி செய்து கொடுக்கக்கூடிய பணியை மேற்கொள்ளுகின்றோம்.

இரண்டாவது மக்கள் சந்திப்பு என்ற அடிப்படையிலே, ஒவ்வொரு வார்டு தோறும், வாரத்திற்கு இரண்டு வார்டு என்ற அடிப்படையிலே சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை, இரண்டு நாட்கள் மாலையிலே அந்த வார்டு பகுதியிலே நேரடியாகத் தெருத்தெருவாக, வீடு வீடாக மக்களைச் சந்தித்து, அவளுடைய தேவைகளைக் கேட்டறிந்து, அதை நிவர்த்திச் செய்து கொடுக்கக்கூடிய பணியை மேற்கொள்ளப்படும். அந்த வகையிலே இன்றைக்கு நாகர்கோவில் மாநகராட்சி 28வது வார்டு பகுதியிலே முதன்முதலாக எங்களுடைய பணியைத் தொடங்கியிருக்கின்றோம்.. அடுத்த வாரத்திற்குள்ளாக, மாநகராட்சி மூலமாகவோ அல்லது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மூலமாகவோ அல்லது அரசினுடைய சிறப்பு நிதியைப் பெற்று, அதன் மூலமாகவோ இந்தப் பகுதிக்குத் தேவையான பணிகளை முழுமையாகச் செய்து கொடுப்போம். இவ்வாறு அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் (பொ) மேரி பிரின்சி லதா, கவுன்சிலர் அண்ணன் லட்சுமி, தி.மு.க. மாநகர செயலாளர் ஆனந்த், துணைச் செயலாளர் ராஜன் வட்டச் செயலாளர் முத்து கிருஷ்ணன், திமுக நிர்வாகிகள் சிடி சுரேஷ், கிருஷ்ண குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழா!

நாமக்கல், ஜூன் 11 -

நாமக்கல் மாவட்ட கழக இளைஞர் அணி சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழா ராசிபுரத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.ராஜேஸ் குமார் அறிவுறுத்தலின் பேரில், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் விஸ்வாவின் ஆலோசனையின் படி, நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம். கார்த்திக் தலைமையில் நடைபெற்ற விழாவில் கழகக் கொடி ஏற்றப்பட்டு, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

மேலும், கலைஞர் அவர்களின் புகழும் சாதனைகளும் நினைவு கூரப்பட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் நகர இளைஞரணி பொறுப்பாளர் பாண்டி, லாவன் குமார், நகர மாணவரணி பொறுப்பாளர் கிஷோர், ஒன்றிய பொறியாளர் துணை அணி பொறுப்பாளர் சஞ்சய், இளைஞரணி உறுப்பினர் வினோத் குமார், 23வது வார்டு இளைஞரணி நிர்வாகிகள் ராமசாமி, கண்ணகி, குமார், அன்பு, கார்த்திக் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், இளைஞரணி உறுப்பினர்கள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

கழக மூத்த முன்னோடி குயவர்பாளையம் வீ. பக்கிரி திருவுருவப்படம்!

புதுச்சேரி மாநிலக் கழக அமைப்பாளர் இரா.சிவா திறந்து வைத்து அஞ்சலி!

புதுச்சேரி, ஜூன்11 -

புதுச்சேரி மாநிலம், நெல்லித்தோப்பு தொகுதி, குயவர்பாளையம் கிளைக் கழகச் செயலாளரான வீ. பக்கிரி (எ) முனுசாமி என்பவர் தமது 18-வது வயதில் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், திராவிட மாடல் அரசின் நாயகர் தளபதியார் ஆகியோர் வழியில் கடந்த 50 ஆண்டு காலமாக மேற்கண்ட கிளையின் செயலாளராக தொடர்ந்து பணியாற்றி கழக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்.

"அண்ணா நாடக மன்றம்" துவங்கி "கழகத்தின் காவியம்", "புரட்சியாளர் பாண்டியன்", "காதலிக்க போகிறேன்", "கற்பின் கோபுரம்" நாடகங்கள் நடத்தி, கழகத்தின் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்த்தவர்.

பாரத பிரதமராக இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் தமிழர்களை பார்த்து "நான் சென்ஸ்" என்று சொன்னதை எதிர்த்து கருப்புக் கொடி போராட்டம் நடத்தி சிறை சென்றவர். புதுச்சேரியை தமிழ்நாட்டோடு இணைக்கும் இணைப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தமது 32-வது வயதில் அப்போதைய புதுச்சேரி முதல்வர் எம்.ஓ.எச். பாரூக் மரைக்காயர் முன்னிலையில், புலவர் பொன்னிவளவன் அவர்கள் தலைமையில் இராகு காலத்தில் சுயமரியாதை திருமணம் செய்து கொண்டு, அன்றைய இளைஞர்கள் பலரும் சுயமரியாதை திருமணம் செய்து கொள்ள உதவி புரிந்தவர். மேலும் மறைந்த மாவீரன் சிட்டி பாபு அவர்கள் நினைவாக தன்னுடைய மகனுக்கு "சிட்டிபாபு" என்று பெயர் சூட்டி அழகு பார்த்த பக்கிரி என்கிற முனுசாமி அவர்கள் தமது 82வது வயதில் உடல்நலக் குறைவால் 10.05.2026 அன்று உடல் நலக்குறைவால் இயற்கை எய்தினார்.

அவரது படத்திறப்பு விழா குயவர்பாளையம் குட்டை கரைப்பள்ளி அருகில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வே. கார்த்திகேயன் தலைமை தாங்கினார். புதுச்சேரி மாநிலக் கழக அமைப்பாளர் இரா. சிவா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கழக மூத்த முன்னோடி பக்கிரியின் திருவுருவப் படத்தை திறந்து வைத்து 500 பேருக்கு அன்னதானம் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சிக்கு தொகுதி செயலாளர் நடராஜன், அவைத்தலைவர் பானு கணேசன், மூத்த முன்னோடி ராஜேந்திரன், இளைஞர் அணி தொகுதி அமைப்பாளர் ராம்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் மாநில அவைத் தலைவர் எஸ். பி. சிவகுமார், கழக சட்டமன்ற உறுப்பினர் விக்னேஷ் கண்ணன், மாநில துணை அமைப்பாளர் தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் லோகையன், பொதுக்குழு உறுப்பினர்கள் சக்திவேல், வேலவன், வேலன், தொகுதி செயலாளர்கள் சக்திவேல், தியாகராஜன், சத்தியவேல், மகளிர் அணி அமைப்பாளர் காயத்ரி, தொகுதி நிர்வாகிகள் அருண், கண்ணன், வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஞானராஜ், சந்தோஷ்குமார், அன்பு, வேல்முருகன், சங்கர், ஏழுமலை, மதியழகன், ரமேஷ், தேவேந்திரன், பொன்னப்பன், மூர்த்தி, வள்ளியம்மை, கலைச்செல்வி, எழிலரசன், ஸ்டீபன் ராஜ், ரவி, ராஜி, கண்ணன், அருள், ஆட்டோ சக்தி, பரிதிமாள், கார்த்திக் இளைஞரணி கார்த்திக், பூஷ்ணபதி, டி எஸ் பெருமாள், யூசுப் கான், சக்திவேல், வெங்கடேஸ்வரன், மற்றும் அவரது குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

தமிழினத் தலைவர் கலைஞரின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு கோவை வடக்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.கே.வேலுச்சாமி ஏற்பாட்டில் தொண்டாமுத்தூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்புக், பேனா, பென்சில், டிபன் பாக்ஸ், அடங்கிய உபகரணங்களை மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி வழங்கினார். அதில் மாவட்ட துணைச் செயலாளர் ஜெயந்தி சக்திவேல், பேரூர் கழக செயலாளர் டி.வி.குமார், பேரூராட்சி தலைவர் கமலம் ரவி, துணைத் தலைவர் மு.ப.நடராஜ், கவுன்சிலர் தியாகு, சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் ஏ.எம்.உசேன், கிளைச் செயலாளர்கள் சேகர், நாகராஜ், ரமேஷ், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் கிஷோர், கழக நிர்வாகிகள் இப்ராஹிம், கதிர்வேல் , தளபதி உசேன், அசோக், அய்யாசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

'இண்டியா' கூட்டணியை காங்கிரஸ் சுய நலத்துக்காக இழந்துவிட்டது!

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, ஜூன் 11 –

'இண்டியா' கூட்டணியை காங்கிரஸ் தனது சுய நலத்துக்காக முதுகில் குத்தும் கூட்டமாக மாறிவிட்டது என 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் விமர்சித்துள்ளது.

அது வருமாறு

இந்தியா கூட்டணி கட்சிகளின் ஆலோசனை கூட்டம் டெல்லி யில் நேற்று நடந்தது. இந்த கூட்டத்தில் மொத்தம் 23 அரசியல் கட்சிகள் பங்கேற்றுள்ளன. இந்தியா கூட்டணி தொடங்கியதி லிருந்து அக்கூட்டணியின் மைய சக்தியாக திராவிட முன்னேற்றக் கழகம் இயங்கியது. தமிழ்நாட்டில் நடந்த சட்டமன்ற தேர்தலுக்குப் பின், காங்கிரஸ் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இழைத்த துரோகத்தினால் மனக்காயமுற்றிருக்கும் கட்சியினரின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கின்ற வகையில், இந்தியா கூட்டணிக் கூட்டத்தில், அதாவது காங்கிரஸ் பங்கேற்கும் கூட்டத்தில் திமுக பங்கேற்காது என அக்கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் ஏற்கனவே அறிவித்து விட்டார். ஆம் ஆத்மியும் பங்கேற்கவில்லை. டெல்லி முழுவதும் ராகுல் காந்தி மற்றும் காங்கிரசுக்கு எதிராக பரபரப்பு போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன. அதில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக காங்கிரஸ் நம்மை சார்ந்து வளர்ந்து வந்தது.

ஆனால் இன்று அவர்கள் நம்மை முதுகில் குத்தி விட்டார்கள் என இருந்தது. இது போன்று மேற்குவங்க முன்னாள் முதல்வர் மம்தா பானர்ஜி, தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார், டெல்லி முன்னாள் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், பஞ்சாப் ஆம் ஆத்மி முதல்வர் பகவந்த் மான் மற்றும் பிற தலைவர்களின் பெயரிலும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தது. அதில் காங்கிரஸ் கட்சியை சார்ந்து இருக்க முடியாது என்ற வாசகங்களும் டெல்லி வீதிகளில் இடம்பெற்று இருந்தன.

தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி யுடன் கூட்டணி அமைத்துள்ள தவெகவுக்கு அழைப்பு விடுக்க வில்லை. நாடாளுமன்ற உறுப்பி னர்கள் உள்ள கட்சிக்கு மட்டுமே இந்த கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டு இருப்ப தாக காங்கிரஸ் கூறியுள்ளது. மேற்குவங்க சட்டமன்ற தேர்த லில் மம்தா பானர்ஜி தலைமை யிலான திரிணாமுல் காங்கிரஸ் கட்சி, ஆட்சியை இழந்ததை தொடர்ந்து, அக்கட்சியில் உட்கட்சிப் பூசல் மற்றும் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சுமார் 15 ஆண்டுகளாக மேற்கு வங்கத்தில் அதிகாரத்தில் இருந்தார் மம்தா பானர்ஜி.

தினகரன்

ஜூன் 9, 2026 செவ்வாய்க்கிழமை

தள்ளாடும் கூட்டணி

இந்தியா கூட்டணி கட்சிகளின் ஆலோசனை கூட்டம் டெல்லியில் நேற்று நடந்தது. இந்த கூட்டத்தில் மொத்தம் 23 அரசியல் கட்சிகள் பங்கேற்றுள்ளன. இந்தியா கூட்டணி தொடங்கியதிலிருந்து அக்கூட்டணியின் மைய சக்தியாக திராவிட முன்னேற்றக் கழகம் இயங்கியது. தமிழ்நாட்டில் நடந்த சட்டமன்ற தேர்தலுக்குப் பின், காங்கிரஸ் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இழைத்த துரோகத்தினால் மனக்காயமுற்றிருக்கும் கட்சியினரின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கின்ற வகையில், இந்தியா கூட்டணிக் கூட்டத்தில், அதாவது காங்கிரஸ் பங்கேற்கும் கூட்டத்தில் திமுக பங்கேற்காது என அக்கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் ஏற்கனவே அறிவித்து விட்டார். ஆம் ஆத்மியும் பங்கேற்கவில்லை. டெல்லி முழுவதும் ராகுல் காந்தி மற்றும் காங்கிரசுக்கு எதிராக பரபரப்பு போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன. அதில் 20 ஆண்

இந்தியா கூட்டணி என்றாலும் மேற்குவங்கத்தில் காங்கிரஸ் தனித்தே போட்டி யிட்டது. இக்கூட்டணி இருந்தா லும் மாநில கட்சிகளுடன் மோதல் போக்குடன் பிடிவாத மாக காங்கிரஸ் கட்சி இருந்து வந்துள்ளது. தற்போது திரிணா முல் காங்கிரஸ் கட்சியில் அதிருப்தி அடைந்த எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள் பலர் வெளியேறும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

சிவ சேனாவின் தலைவர் உத்தவ் தாக்கரே பங்கேற்கவில்லை. தேசியவாத காங்கிரஸ் எம்.பி. சுப்ரியா சுலே பங்கேற்றார். தமிழகத்திலிருந்து வைகோ, திருமா உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்றுள்ளனர். கூட்டத்துக்கு பிறகு விசிக தலைவர் திருமாவளவன் பரபரப்பு குற்றச்சாட்டை கூறி யுள்ளார். அதில், காங்கிரஸ் செயல் விரும்பத்தக்கது அல்ல. நடந்து முடிந்த தேர்தலில் காங்கிரஸ் செயல்பாடு திமுக, திரிணாமுல், மார்க்சிஸ்ட்டை பலவீனப்படுத்தி உள்ளது. காங்கிரஸ் கட்சி கையாண்ட அணுகுமுறையால் இந்தியா கூட்டணியில் உள்ள கட்சி களிடையே அதிருப்தி நிலவி வருகிறது. காங்கிரஸ் தனது செயல்பாடுகளை சுய பரிசோதனை செய்ய வேண்டும். ஒற்றுமையை இன்னும் வலு வாக முன்னெடுப்பதற்கான வழிகளை கண்டறிய வேண்டும் என கூறியுள்ளார்.

பாஜ அரசுக்கு எதிராக தேசிய அளவில் வலுவாக இருந்த இந்தியா கூட்டணியை சுய நலத்துக்காக காங்கிரஸ் பலவீனப் படுத்திவிட்டது. குறிப்பாக மாநில கட்சிகள் கூடவே இருந்து அதன் வளர்ச்சியை முடித்து வைத்து விட்டதாக அரசியல் நோக்கர்கள் குற்றம் சாட்டுகின்றனர். மொத்தத்தில் இந்தியா கூட்டணி கூட்டம் ஒரு மித்த கருத்துகள் எடுக்கப்படாமல் தள்ளாடும் கூட்டமாக முடிந்துவிட்டது.

இவ்வாறு 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் விமர்சித்துள்ளது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சிங்கார இரத்தினசபாபதி

ஜூன் 11 (2020)

தொ.மு.ச. பேரவையில் இணைப் பொதுச்செயலாளர், பொருளாளர் – தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் ஆகிய பொறுப்பு வகித்ததோடு, மின்கழக தொ.மு.ச. தலைவராக – பொதுச்செயலாளராகவும் பொறுப்பு வகித்து, மின் வாரிய தொழிலாளர்களுக்காக பாடுபட்டவர்.

கழக ஆட்சியில், மின் ஊழியர்களுக்கு முதல்முறையாக ஊதிய உயர்வு – அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் பெற்றுத் தந்தோடு, ஆயிரக்கணக்கான ஒப்பந்த ஊழியர்களுக்கு பணி நிரந்தரம் பெற்றுத் தந்தார். அ.தி.மு.க. ஆட்சியில் ஊழியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை கண்டித்துப் போராட்டங்கள் நடத்தியதோடு, 2.57 சதவீத ஊதிய உயர்வை போராடிப் பெற்றுக் கொடுத்தது என மின்வாரிய ஊழியர்களின் நலன்களுக்காகவும் – உரிமைகளுக்காவும் தொடர்ந்து குரல் கொடுத்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் பேராசிரியர் பெருந்தகையின் பேரன்பையும் பாசத்தையும் பெற்றதோடு, தலைமைக் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் – மாநாடுகளிலும் மின்கழக தொ.மு.ச.வினரை பெருந்திரளாக பங்கேற்க வைத்து, கழகத்தின் வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.